> எத்தனை சிறியதாக இருந்தாலும் சரி, தேவைப்படுவோருக்குக் கொடு. ஒன்றுமில்லாதவருக்கு அது அளப்பெரியது. நாம் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால், கடவுளுக்கும் அது அளப்பெரியது.
>
> - புனித கிரகோரி நாஸியாசன்

கூறியிருக்கிறார். இவ்வாரம் அவர் இரண்டு உதாரணங்களைத் தந்துள்ளார். நாமே விதை, அவர் விதைக்கிறார். வளருகிறோம் அறுவடை நாள் வரை. நமக்குப் பதிலாக பிறர் வருகிறார்கள், அவர்களும் வளருகிறார்கள். எத்தனை பின்னொரு உவமையையும் இயேசு கூறுகிறார். இறையாட்சியை கடுகு விதைக்கு ஒப்பிடுகிறார். கடுகு விதை வளர்ந்து மரமாகிறது. அதன் நிழலில் பலர் நன்மை அடைகிறார்கள். விசுவாசத்திலும் நன்னடத்தையிலும் வளர்வதால், இனி நாமல்ல என்று சொல்லுமளவுக்கு நாம் முதிர்ச்சிப் பெறுகிறோம்.

இங்கு நமது காலமும் ஒரு முடிவுக்கு வரும் என நமது காதில் இயேசு ஓதுகிறார். நமது 'சுய-வாழ்வு' பற்றி மறைவான செய்தி உண்டு. நாம் என்ன செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியும். ஆயினும் நாம் தாமதப்படுத்துகிறோம். பரலோகம் செல்ல நாம் விரும்புகிறோம் ஆனால் நமது முடிவு குறித்து யோசிப்பதில்லை. நமது தொலைதூர எதிர்காலத்தை நம்மால் காண முடியாது. அதனால் விசுவாசக் கண்ணோடு நாம் நடக்க வேண்டுமே தவிர ஊனக்கண்ணால்ல. நமக்கும் அறுவடை காலம் வரும், இருப்பினும் வாழ்வு நிரந்திரமானது என்ற நினைப்பில் வாழ்கிறோம்.

இந்த உடலும் வாழ்வும் தற்காலிகமானது என புனித பவுல் உண்மைநிலையை உணர்த்துகிறார். இறுதி தீர்ப்பை நாம் சந்திக்க வேண்டும். பிறருக்கு உதவும் வகையில் நமது மரம் வளர்ந்ததா என்பது குறித்தது ஆண்டவர் இறுதி முடிவு செய்வார். இந்த உடல் நிரந்திரமல்ல, புதியதொரு நிலைக்குச் செல்கிறது என நாம் ஏற்றுக் கொண்டால், நமது அண்டை-அயலாரில் இயேசுவைக் காண்போம், நம்மை விட இன்னும் அதிகமாக பிறர் வளர உதவுவோம். நாம் விதைப்போம், பிறர் அறுப்பர்.

இன்றைய வாசகம் அனைத்தையும் எடுத்துரைத்து, நம்மை வலியுறுத்துகிறது, 'ஆண்டவராகிய நான் ஓங்கிய மரத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த மரத்தை ஓங்கச் செய்துள்ளேன் என்றும் பசுமையான மரத்தை உலரச் செய்து, உலர்ந்த மரத்தைத் தழைக்கச் செய்துள்ளேன்' . கடவுளால் அது முடியும்! இம்மாதிரியான சூழ்நிலையானாலும்...விசுவாசத்தில் நட, விசுவாசத்தில் வளரு, விசுவாசத்தில் வாழ். ✝

**வாரம் ஒரு வசனம்**

நாம் விதைப்போம், பிறர் அறுப்பர்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 24/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

17 ஜூன் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 11ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



**மாதாந்திர கருப்பொருள்:**

## எடுத்து, பிட்டு, கிறிஸ்துவில் அளித்து

# விசுவாசக் கண்ணால் நட, ஊனக் கண்ணாலல்ல

இறையாட்சி குறித்து பல சமயங்களில் இயேசு விவரித்திருக்கிறார். இந்த உவமைகளைப் பகிர்ந்து கொள்வதில் இயேசுவிற்கு எப்போதும் விருப்பம். அந்த அரசைச் சார்ந்தவன் என அவர் கூறுவார். நாமும் அங்கு செல்ல முடியும் எனக்

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***

*2018 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*

***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

### பங்கு அலுவலக நேரம்

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 11ஆம் ஞயிறுசனி 16 -06-2018 - ஞாயிறு 24-06-2018 வரை**

எசே: 17: 22-24 திபா: 91: 2-3, 13-14, 15-16 2 கொரி: 5: 6 -10 மாற்கு: 4: 26 - 34

**"உமது பெயரைப் பாடுவது உன்னதரே நன்று." திபா 91**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (புனித றோஸ்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு. பெட்ரிக்)<br>திருப்பலி (ஆ)(மறைக்கல்வி படிவம் 4)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது** |
| திங்கள் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 20 | காலை திருப்பலி நடைபெறாது | | **குருக்களின் மாதாந்திர தியானம்** APC கோலாலும்பூர் |
| வியா | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 22 | 6.45 கா | திருப்பலி | |

**திருமுழுக்கு யோவானின் பிறப்பு பொதுக்காலம் 12ஆம் ஞயிறு**

எசாயா: 49: 1-6 திபா: 138: 1-3, 13-14ab, 14c-15 திப: 13: 22 -26 லூக்: 1: 57 - 66, 80

**"வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்" - திபா 138**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித அல்பேர்ட் / புனித மார்கரெட்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (பு.மொனிக்கா)<br>திருப்பலி (ஆ) (புனித ஹிலாரி)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 7.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது**<br><br>**மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் சிற்றாலய திருவிழா :** காலை 10.00 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து திருவிழா திருப்பலியும் |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2018 ஜூன் (ஆனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

i) ஆலய காணிக்கை

அ) 09/10 ஜூன் 2018 ரிம: 9227.10 தித்தி : ரிம 64.00

*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

ii) **ஆலய வளாகத்தினுள் தூய்மையை பேணுதல் :** ஆலய வளாகத்தினுள் குப்பைகளை போடுவதைத் தவிர்க்கவும், சுவர்களில் ஆணி அடிப்பதோ சுவரொட்டிகள் ஒட்டுவதோ முற்றிலும் தவிர்க்கவும், இது இறைவனுடைய இல்லம் என்பதை எப்போதும் கவனத்தில் கொண்டு நன்றாக பராமரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

iii) **திருப்பலிக்கு முறையான உடையணிந்து வருதல் :** திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- **பங்கு மக்களுக்கு ஓர் அழைப்பு:** நம் ஆலயத்தில், மாதா கெபியில் உங்களுக்கு ஏற்பட்ட அற்புத அடையாளங்களை தெரிவிக்க அழைக்கிறோம். பங்கு அலுவலகம் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.
- **பைபிள் பாடம் எஸ்.பி.எம்** தேர்வில் பங்கு கொள்ள இப்போதே தயாராகுங்கள். படிவம் 3 மாணவர்களை இந்தப் பாடத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம். (வகுப்புகள் சனிக்கிழமை பகல் 2.30) தற்போது படிவம் 4 & 5 மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள்.தொடர்புக்கு. ஹெல்டன் 012-237 0982
- **திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** ஆலய அலுவலகத்தில் உள்ள படிவத்தில் உங்களுடைய விவரங்களை முதலில் பதிவு செய்தபின் பங்கு குருவானவரைச் சந்தியுங்கள். (குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்னர்) கடைசி நேர திட்டமிடலை தவிருங்கள்.
- **பங்கு மூத்த குடிமக்கள் ஒன்றுகூடல்:** நடனத்தோடு கூடிய விருந்து (25-08-2018) இதற்கான டிக்கெட்டுக்களை வாங்கிக் கொள்ள தொடர்புக்கு: மரியதாஸ் (06- 761 2777) மார்ஜி (018-395 0546)

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

- **அருள்திரு.அண்ட்ரூ கூய்** அவர்கள் மினவுதல் தேவாலயத்தில் உதவி பங்கு தந்தையாக ஜூலை 1,2016 முதல் நமக்காகப் பணிபுரிந்துள்ளார். 1,ஜூலை 2018 முதல் காஜாங் திருக்குடும்ப தேவாலயத்தின் பங்கு தந்தையாகப் பணி செய்யவிருக்கிறார். அவருக்கு நம்முடைய இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வோம். ஜூலை 1, 2018 முதல் நம் மினவுதல் மாதா தேவாலயத்தின் உதவி பங்கு தந்தையாக வரவிருக்கும் **அருள்திரு.சேவியர் அண்ட்ரூ** அவர்களை வரவேற்போம்.
- **170 ஆம் ஆண்டு வரலாற்று நினைவுப் புத்தகம் மற்றும் ஒளிவட்டு: "கார்னர் ஸ்டோன் காஃபி டேபிள்"** உங்களுடைய பிரதியை பெற்றுக்கொள்ள தொடர்புக்கு: ஜெரோம்- 019-790 8071 - அல்லது பங்கு அலுவலகத்தை நாடவும். "ஹரி ராயா" விடுமுறையை ஒட்டி சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதற்கு வருந்துகிறோம். விரைவில் புத்தகம் உங்கள் கரங்களில் தவழும். **நன்றி. (170 ஆம் ஆண்டு விழா புத்தக குழு)**
- **உறுதிப்பூசுதல் அருளடையாளக் கொண்டாட்டம்:** ஜூலை 21,2018(சனிக்கிழமை) மாலை 6.00 மணி. அனைத்து உறுதிபூசுதல் மாணவர்களும் அதிச/பங்கு பணிக்குழுக்களில் இணைந்து பணி செய்ய அழைக்கிறோம். கடந்த உறுதிபூசுதல் முகாமில் உதவி செய்த மறைக்கல்வி ஆசிரியர்கள்/பெற்றோர்கள் அனைவருக்கும் நமது நன்றிகள் உரித்தாகுக! அருள்திரு. ஜோர்ஜ் அவர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து உரையாடுவார்.
- **தேசிய நிதிதிரட்டு:** மினவுதல் தேவாலயத்தின் 23/24 ஆகிய திருப்பலிகளின் காணிக்கை கோலாலம்பூர் மாமறை மாவட்ட நிதி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன்பின் அந்த தொகை நாட்டின் தேசிய நிதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்.
- **விசேச கையேடு:** ஒருங்கிணைந்த எட்டு பணிக்குழுக்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேட்டை மாமறை மாவட்டம் வெளியுட்டுள்ளது. அதிச மற்றும் பணிக்குழு பொறுப்பாளர்கள் உங்களுடைய பிரதியை பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்புக்கு: ஜோன் மெய்னார்ட்( BECAT)
- **வீடுகளில் இருக்கும் நோயாளிகளுக்காக:** அதிச க்களில் வீடுகளில் இருக்கும் நோயாளிகளைப் பற்றி பங்கு அலுவலகத்திற்கோ அல்லது அதிச பொறுப்பாளர்களுக்கோ இது வரை தெரியப்படுத்தவில்லை என்றால் உடனடியாகத் தெரிவிக்கவும். கடைசி நேரம் வரை குருவானவருக்காகக் காத்திருக்க வேண்டாம். அதிச/சோன் மற்றும் நற்கருணைப் பணியாளர்கள் உங்கள் அருகாமையில் இருக்கும் நோயாளிகள் வாரம் தோறும் நற்கருணைப் பெற்றுக்கொள்ளுமாறு கவனித்துக் கொள்ளுங்கள்.
- **கணினி அனுபவமுள்ளவர்கள் தேவை :** தமிழ் திருப்பலி நேரத்தில் LCD இயக்க கணினி அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். தொடர்புக்கு : பங்கு அலுவலகம் அல்லது கப்ரியேல் : 010 367 6954

- **ஜூன் 17, 2018(ஞாயிறு)** தேசிய மொழி அப்போஸ்தலப் பணிக்குழுவின் தேர்தல்- மினவுதல் தேவாலய மண்டபம்.
- **19 & 20 ஜூன் 2018** - குருக்களின் மாதாந்திர தியானம்
- **22 -24 ஜூன் 2018: மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் திருவிழா**
  - **ஜூன் 22 (வெள்ளி)** மாலை 7.00 செபமாலை / ஒப்புரவு / திருமணி ஆராதனை / கொடியேற்றம் / திருப்பலி/நோயில் பூசுதல்
  - **ஜூன் 23 (சனி)** மாலை 7.00 செபமாலை / ஒப்புரவு /திருப்பலி / திருச்சுற்றுப்பவனி
  - **ஜூன் 24 (ஞாயிறு)** காலை10.00செபமாலை / திருவிழா திருப்பலி
- **ஜூன் 27,2018 - அதிச ஒருங்கிணைப்பாளர் குழு கூட்டம் (BECCOT) மலேசிய குருக்களின் விசேச பேரவை: ஜூலை 16-20 (திங்கள்-வெள்ளி) ஜோகூர் பாரு , மாஜோடி செண்டரில் நடைபெறும்.**

**ஹரி ராயா பெருநாளைக் கொண்டாடும்**
**நம்முடைய முஸ்லிம் சகோதர சகோதரிகள் அனைவருக்கும்**
***"ஹரிராயா பெருநாள் வாழ்த்துகள் & மாஃப் ஸஹிர் டான் பாத்தின் "***